University of Jaffna, Sri Lanka
Faculty of Management Studies and Commerce

# PROCEEDINGS

# 6th International Conference on Contemporary Management 2021

## Issues and Challenges of Sustainable Development: Fostering Resolutions towards Economic Resilience

29th - 30th April 2021

Academic Partner

emerald PUBLISHING

ISSN 2783-8773

# ICCM-2021

# PROCEEDINGS

# 6th International Conference on Contemporary Management

**"Issues and Challenges of Sustainable Development: Fostering Resolutions towards Economic Resilience"**

29th & 30th April, 2021

Faculty of Management Studies and Commerce
University of Jaffna,
Sri Lanka

©Copy Right : 2021 Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka.

Published by : Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka.

URL : https://iccm.maco.jfn.ac.lk

e-mail : iccm2021@maco.jfn.ac.lk

T.P : +94 (0)21 222 3610

Printers : Guru Printers, Thirunelvely, Jaffna, Sri Lanka.

ISSN : 2783-8773

**Disclaimer:**

The contents of the full papers included in the publication proceedings remain with respective authors.

# அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கம் : யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**முனியப்பன் துலாபரணி, சிவசுப்பிரமணியம் ரகுராம்**

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை*

குடிமக்களுக்கு உரிமையை வழங்கும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் இலங்கையில் நீண்டகால விவாதத்திற்கு பின்னர் 2015ஆம் ஆண்டு அடிப்படைச் சட்டமாக அரசியலமைப்பில் உள்ளிணைக்கப்பட்டு 2016ஆம் ஆண்டில் 12 ஆம் இலக்கச் சட்டமாக அது ஜூன் மாதம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்டு இற்றைக்கு நான்கு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்துவதை இலகுபடுத்துவதற்காக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டவாறான அனுசரணைப் பணிகள் பெருமளவிற்கு முன்னெடுக்கப்படவில்லை. பல அரசாங்க நிறுவனங்களிலும் தகவல் அலுவலர்கள் நியமிக்கப்படாமை, அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறை அமுலாக்கத்தில் மந்தநிலையில் இயங்குதல், இச்சட்டம் பற்றிய விழிப்புணர்வு காணப்பட்ட போதிலும் அதனை கருத்திற்கொள்ளாது அரசாங்க அதிகாரிகள் செயற்படுகின்றமை, அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமை சட்டத்தை அமுலாக்கக் கூடிய அதிகார ஒழுங்கமைப்புக்களும் தகவல்களை வழங்குவதற்கான ஒழுங்கமைப்புக்களும் சீராக இன்மை மற்றும் தன்னார்வமாக தகவல்கள் முற்கூட்டியே மக்களுக்கு வெளிப்படுத்தப்படுவதில்லை, தகவல் அறியும் உரிமை சட்ட ஆணைக்குழு முழு வீச்சுடன் செயற்படாமை ஆகிய குறைபாடுகள் காணப்படுவதாக பலதரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. மேற்குறித்த நிலைமைகள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அவதானிக்கப்பட்டதன் விளைவாக எந்தளவிற்கு வினைத்திறனுடன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றன என்பதனை ஆராய்வது அவசியமாகின்றது என்பதை நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலும், நல்லூர் பிரதேச செயலகத்திலும் ஒரு வருட காலப்பகுதிக்குள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்கோரி விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் விபரங்கள், அவற்றுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சார்ந்து தகவல் அலுவலர்களிடமிருந்து அவதானிப்பு, நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலமும் தகவல்கள் திரட்டப்பட்டு அளவைசார் பகுப்பாய்வு முறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் அறிமுகச் செயற்பாட்டுமுறையில் காணப்பட்ட போதிலும், அவை முழுமைப்பெறாத நிலையே காணப்படுகின்றது என்பது கண்டறியப்பட்டது. இச்சட்டம் மாவட்ட மட்ட அரசாங்க நிறுவனங்களில் அமுலாக்கத்தில் காணப்படுவதைப் போன்று பிரதேச மட்டத்தில் அமுலாக்கம் செய்யப்படுவதில்லை என்பதும் அரசாங்க நிறுவன தகவல் அறியும் உரிமைச் சட்ட அமுலாக்கலில் பல குறைபாடுகள் காணப்படுவதும் ஆய்வின்வழி வெளித்தெரியவந்தது..

**திறவுச்சொற்கள்:** *தகவல் அறியும் உரிமைச் சட்டம்; அரசாங்க நிறுவனங்கள்; சட்ட அமுலாக்கம்*

# அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கம் : யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

முனியப்பன் துலாபரணி[1], சிவசுப்பிரமணியம் ரகுராம்[2]

[1]ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

[1]ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

sthula28@gmail.com[1], ragunadu2003@yahoo.com[2]

சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் குடிமக்களுக்கு உரிமையை வழங்குவதோடு, பொது அதிகாரசபைகளின் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துவதாகக் காணப்படுகின்றது. பொதுமக்கள் தகவலை அணுகிப்பெறுதல் என்பது ஜனநாயகத்தில் பங்கெடுப்பதற்கான ஓர் திறவுகோலாகும். இலங்கையில் நீண்டகால விவாதத்திற்கு பின்னர் இச்சட்டம் 2015ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி அரசியலமைப்பில் உள்ளிணைக்கப்பட்டு அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் ஊடாக அடிப்படைச் சட்டமாக்கப்பட்டது. அதன்பின்னர், 2016ஆம் ஆண்டில் 12 ஆம் இலக்கச் சட்டமாக அது ஜுன் மாதம் நிறைவேற்றப்பட்டது. ஆசியாவின் சிறந்த தகவல் அறியும் சட்டமாகக் காணப்படும் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டு இற்றைக்கு நான்கு வருடங்கள் (2016 – 2020) கடந்துவிட்ட நிலையிலும் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்துவதை இலகுபடுத்துவதற்காக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டவாறான அனுசரணைப் பணிகள் பெருமளவிற்கு முன்னெடுக்கப்படவில்லை.

குறிப்பாக, பல அரசாங்க நிறுவனங்களிலும் தகவல் அலுவலர்கள் நியமிக்கப்படாத நிலையே காணப்படுகின்றது. அதேபோன்று, இலங்கையில் பல அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறை அமுலாக்கத்தில் மந்தநிலையில் இயங்குவதோடு, இச்சட்டம் பற்றிய விழிப்புணர்வு அவர்களிடத்தில் காணப்பட்ட போதும் அதனை கருத்திற்கொள்ளாது அரசாங்க அதிகாரிகள் செயற்பட்டு வருகின்றமை பலதரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. பல அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமை சட்டத்தை அமுலாக்கக் கூடிய அதிகார ஒழுங்கமைப்புக்களும் தகவல்களை வழங்குவதற்கான ஒழுங்கமைப்புக்களும் சீராக இன்மையால், தன்னார்வமாக தகவல்களை முற்கூட்டியே மக்களுக்கு வெளிப்படுத்தப்படுவதில்லை. இத்தகைய குறைபாடுகள் காணப்படுவதற்கு தகவல் அறியும் உரிமை சட்ட ஆணைக்குழுவின் அனுசரணை முழு வீச்சுடன் இச்சட்ட அமுலாக்கத்திற்கு காணப்படாமையும் ஒரு காரணமாகும்.

மேற்குறித்த நிலைமைகள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அவதானிக்கப்பட்டதோடு, அவற்றுக்கான காரணங்கள் தொடர்பிலே வலுவான வாதப்பிரதிவாதங்களும் எழுந்து வருகின்றன. எனவே, இந்த

விடயங்களின் ஊடாக அரசாங்க நிறுவனங்கள் எந்தளவிற்கு வினைத்திறனுடன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றன என்பதனை ஆராய்வது அவசியமாகிறது.

இலங்கை அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் எந்தளவிற்கு அமுலாக்கத்தில் உள்ளது, தகவல் வழங்குவதற்கான பொறிமுறைகள், அரசாங்க நிறுவனங்களில் தகவல்களை வழங்குவதற்கான ஒழுங்கமைப்புக்கள் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டத்தை அமுலாக்கக் கூடிய அதிகார ஒழுங்கமைப்புக்கள் காணப்படுகின்றனவா என்பதை இனங்காணல், தகவல் அதிகாரிகள் போதுமான அளவு நியமிக்கப்பட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் அரசாங்க நிறுவனங்களில் நேர்த்தியாக இயங்குகின்றதா என்பதைக் கண்டறிதல், தகவல்கள், தரவுகள் அனைத்தும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ளதா, தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆணைக்குழுவின் செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன, ஏற்கனவே நாட்டில் காணப்படும் சட்டதிட்டங்களும், அரசாங்க ஊழியர்களின் நடத்தைகளும் எவ்வாறு தகவல் அறியும் உரிமைச் சட்டச் செயற்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதை மதிப்பிடுதல் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் முற்கூட்டியே தகவல்கள் வெளியிடப்படுகின்றனவா என்பதைக் கண்டறிதல் ஆகியன இவ்வாய்வின் நோக்கங்களாக ஆய்வாளரினால் முன்வைக்கப்பட்டன.

இதனடிப்படையில் இவ்வாய்வானது அளவைசார் பகுப்பாய்வு முறையை அடிப்படையாகக் கொண்டு, யாழ்ப்பாண மாவட்டத்தின் முக்கிய அரச நிறுவனங்கள் என்பதன் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலும், நல்லூர் பிரதேச செயலகத்திலும் ஒரு வருட காலப்பகுதிக்குள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்கோரி விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் விபரங்கள், அவற்றுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்பன இந்நிறுவனங்களின் தகவல் அலுவலர்களிடமிருந்து திரட்டப்பட்டன. அத்தோடு, இந்நிறுவனங்களின் தகவல் அலுவலர்களிடம் நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலமும் தகவல்கள் திரட்டப்பட்டன. இவ்வாறு திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் அறிமுகச் செயற்பாட்டுமுறையில் காணப்பட்ட போதிலும், அவை முழுமைப்பெறாத நிலையே காணப்படுகின்றது என்பது கண்டறியப்பட்டது. இச்சட்டம் மாவட்ட மட்ட அரசாங்க நிறுவனங்களில் அமுலாக்கத்தில் காணப்படுவதைப் போன்று பிரதேச மட்டத்தில் அமுலாக்கம் செய்யப்படுவதில்லை எனபதும் அரசாங்க நிறுவன தகவல் அறியும் உரிமைச் சட்ட அமுலாக்கலில் பல குறைபாடுகள் காணப்படுவதும் ஆய்வின்வழி வெளித்தெரியவந்தது..

**திறவுச்சொற்கள் :- தகவல் அறியும் உரிமைச் சட்டம், அரசாங்க நிறுவனங்கள், சட்ட அமுலாக்கம்**

## 01. அறிமுகம்

மனிதனின் அடிப்படையான கருத்துச் சுதந்திரம், 1948ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையால் வெளியிடப்பட்ட உலக மனித உரிமைகள் பிரகடனம் மூலம் உலகளவில் உறுதிப்படுத்தப்பட்டது. அதாவது, ஒவ்வொருவருக்கும் கருத்தைத் தெரிவிக்கும் உரிமையும், மத உரிமையும், பல்வேறு தகவல் சாதனங்களின் துணைகொண்டு தங்களின் கருத்துக்களை உலகெங்கும் பரவச் செய்யும் உரிமையும் உண்டு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. மற்றவருக்கு தடையில்லாமல் கருத்துக்களை வெளியிடக்கூடிய சுதந்திரம் அனைவருக்கும் உண்டு என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

தகவல் அறியும் உரிமையானது ஜனநாயகத்தின் அடிப்படையான விடயம் என்பது நீண்ட காலமாக வரலாற்று ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதை கிரேக்க தத்துவஞானி அரிஸ்ரோட்டில் மற்றும் பிளேட்டோ ஆகியோர் தெரிவித்துள்ள கருத்துக்களிலிருந்து உறுதியாகிறது. அதாவது, “அரசு மற்றும் ஆட்சியுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களையும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்துவதும், அந்த விபரங்கள் குறித்து மக்களைத் தெளிவுப்படுத்துவதும் ஜனநாயகத்தின் அடிப்படை விடயமாகும” என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[1]

இந்த கருத்துக்கள் மற்றும் வெளிப்பாடுகளினால் தெளிவாவது யாதெனில், பிரஜைகளான மக்கள் தகவல்களை அறிந்து கொள்வதற்கு இருக்கும் உரிமை, முழுமையான உரிமையாகும் என்பதாகும். ஒவ்வொரு பிரஜையும் தனது உரிமையைப் பிரயோகிப்பதற்கு அல்லது வேறொருவரின் உரிமையைப் பாதுகாக்க ஏதேனும் தகவல்கள் தேவைப்பட்டால் சட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முறைப்படி அத்தகவலை அறிவதற்கான உரிமைக்கு உரித்துடையவராவர். இதனை எவரும் தவிர்த்துக்கொள்ள முடியாததும், அழிக்க முடியாததுமான அடிப்படை மனித உரிமை என்றே சட்டவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, அத்தகைய தகவல் உரிமையினை உச்சளவில் அனுபவிப்பது பிரஜைகளின் பொறுப்பும் கடமையுமாகும்.

இந்தவகையில், தகவல் அறியும் உரிமைத் தொடர்பான சட்டம் என்பது தகவல்களுக்குள் உட்பிரவேசிப்பதற்குள்ள உரிமைகள் தொடர்பிலான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும், தகவல்களுக்குள் உட்பிரவேசிப்பதை நிராகரிக்கக்கூடிய காரணங்களை உறுதியாகத் தெரிவிப்பதற்கும், தகவல் அறியும் உரிமைகள் தொடர்பான ஆணைக்குழுவை அமைப்பதற்கும், தகவல் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குவிதிகளை சரியான முறையில் தெரிவிப்பதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது துணைக்காரணிகளுக்கான ஏற்பாடுகளை வழங்குவதற்குமுரிய சட்டமாகும் என அறிமுகப்படுத்தப்பட முடியுமாகிறது.

---

[1] ராஜபக்ஷ, தயா ஸ்ரீ நரேந்திர (2018.09.28). தகவல்களைக் கோர பொதுமக்கள் ஊக்கப்படுத்த வேண்டும், தகவல், வெகுசன ஊடக அமைச்சின் உத்தியோகபூர்வ பத்திரிகை வெளியீடு, கொழும்பு, ப.12

எல்லாச் சட்டங்களையும் போல தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கும் ஒரு சிறப்பான உலக வரலாறு உண்டு. நியாயமான உரிமைகளை சட்டரீதியாக நிலைநாட்டிக்கொள்ள முயன்ற ஒரு சிறுமக்கள் குழுமத்தின் உத்வேகமான முயற்சியே இந்த தகவல் அறியும் உரிமைச் சட்டம் உருவாகக் காரணமாகும். 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுவீடன் நாட்டில் 'ஹேட்ஸ்' மற்றும் 'கேப்ஸ்' கட்சிகள்தான் அந்நாட்டின் பிரதான கட்சிகள் ஆகும். நீண்டகாலம் ஆட்சியிலிருந்த ஹேட்ஸ் கட்சி எதிராக கேப்ஸ் கட்சி 1765இல் நடைபெற்ற தேர்தலில் வெளிப்படையான நிர்வாகம் என்பதை முன்னிறுத்திக் களம் இறங்கியது. ஆட்சியைக் கைப்பற்றியவுடன், சுவீடன் அரசாங்கம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பிறப்பித்தது. இச்சட்டத்தை சுவீடன் அரசாங்கம் 1766ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தியுள்ளது. சுவீடன் பிரஜைகள் 250 வருடங்களுக்கு முன்பிருந்தே இச்சட்டத்தின் கீழ் தகவல் அறியும் உரிமையின் பிரதிபலன்களை அனுபவித்து வருகின்றனர்.[2]

அதனைத் தொடர்ந்து, உலகில் இரண்டாவது நாடாக தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தை 1951ஆம் ஆண்டு பின்லாந்து நிறைவேற்ற, டென்மார்க் மற்றும் நோர்வே நாடுகள் 1971இலும், ஐக்கிய அமெரிக்கா 1966ஆம் ஆண்டிலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்தன. உலகின் ஜனநாயகத்தின் தொட்டிலாக அடையாளப்படுத்தப்படும் ஐக்கிய இராச்சியம் (பிரித்தானியா) தமது பிரஜைகளுக்கென 2000ஆம் ஆண்டில் தகவல் சட்டத்தை அறிமுகப்படுத்தியது. இலங்கையைப் பொறுத்தவரையில் 2016ஆம் ஆண்டே இச்சட்டம் கைகூடியது எனலாம்.

இலங்கையும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான குறிப்பிடத்தக்க வரலாற்றைக் கொண்டுள்ளது. ஆனால், இச்சட்டம் நடைமுறைச் சாத்தியத்திற்கு கொண்டுவரப்பட்ட காலப்பகுதியை எடுத்து நோக்கினால், அதற்கு மூன்று வருடகால வரலாறே உள்ளது. 2015ஆம் ஆண்டில் அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டு அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தத்தின் ஊடாக இது அடிப்படை உரிமை சட்டமாக்கப்பட்டது. இது, 2015ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி இடம்பெற்றது. அதன்பின்னர், இந்த உரிமை நடைமுறைச் செயற்பாட்டிற்கு 2016ஆம் ஆண்டில் 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டமாக ஜூன் மாதத்தில் நிறைவேற்றப்பட்டது.

**இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் உள்ளடக்கியுள்ள விடயங்கள்**

பெரும்பாலான நாடுகளில் தாய்ச் சட்டமான அரசியலமைப்பில் தகவலைப் பெறும் உரிமை அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் கூட அரசு, மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் இந்த மூன்று அமைப்புக்களோடும் சம்பந்தப்பட்ட ஏனைய பகிரங்க அதிகாரசபைகள், அதனுடைய துணை அமைப்புக்களோடு சம்பந்தப்பட்ட விடயங்களில் பொதுமக்களை பாதிக்கும் விதமான தீர்மானங்களை எடுக்கும்

[2] ராஜபக்ஷ, தயா ஸ்ரீ நரேந்திர (2018.07.13). தகவல் சுதந்திரம் நிறைந்த உரிமைகள் கொண்ட உலக நாடுகள், தகவல், வெகுசன ஊடக அமைச்சின் உத்தியோகபூர்வ பத்திரிகை வெளியீடு, கொழும்பு, ப.06

தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், இங்கு சொல்லப்பட்ட ஓர் நிபந்தனை என்னவென்றால் 'சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக, இவை நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டு தற்போது சட்டமாக்கப்பட்டுள்ளது. இந்த சட்டமானது ஆறு குறிக்கோள்களையும் சில நோக்கங்களையும் கொண்டுள்ளது.[3]

I. தகவல்களை பெற்றுக்கொள்ளும் உரிமையை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது.

II. இந்த தகவலைப் பெற்றுக்கொள்ள நாடும் பொழுதில் எந்த தகவல்களை, எச்சந்தர்ப்பத்தில் பாதுகாக்கப்பட்ட தகவல்களாக வழங்க மறுக்கலாம்.

III. அமைச்சுக்கள், பகிரங்க அதிகாரசபைகள் இந்த தகவல்களை வழங்குவதற்கு என்னென்ன கடமைகளைக் கொண்டுள்ளன.

IV. தகவல் உரிமைகள் ஆணைக்குழுவின் உள்ளடக்கம், அதன் பணிகள், தத்துவங்கள் பற்றி கூறுகின்றது.

V. ஒவ்வொரு அரச நிறுவனங்களும், அதிகாரசபைகளும் 'தகவல் அலுவலர்' (Information Officer) என்ற ஒருவரை நியமிக்க கடமைப்பட்டுள்ளனர்.

VI. அதேபோன்று, தகவல்களை ஒருவர் கோருகின்ற போது அத்தகவல் மறுக்கப்பட்டால் மேன்முறையீடு செய்வதற்கான நடைமுறையும் இதில் கூறப்பட்டுள்ளது.

இதற்கும் மேலதிகமாக, இச்சட்டம் எதனை எதிர்பார்க்கின்றது என்றால், ஒருவர் தன்னுடைய அடிப்படை உரிமை மூலம் தகவல்களை அணுகிப்பெற வேண்டும் என்பதாகும். அதன் மூலமாக, அரசாங்க நிறுவனங்கள் வெளிப்படையாகச் செயற்பட வேண்டும், அதேபோன்று, பொறுப்புக்கூறும் தன்மையும் காணப்பட வேண்டும் என்பவை எதிர்பார்க்கப்படுகின்றன. மக்கள், ஊழல் தொடர்பாக குரல் கொடுப்பதற்கான ஓர் சந்தர்ப்பமாக தகவல் அறியும் உரிமைச் சட்டம் அமைந்திருக்கின்றது.

**இலங்கை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் காணப்படும் சிறப்பம்சங்கள்**

அண்மையில் கிடைக்கப்பெற்ற தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் இலங்கைக்கென சில தனித்துவமான சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன.[4] இலங்கை தகவல் உரிமைச் சட்டத்தின் வெற்றியின் பிரகாரம் இச்சட்டம் ஆசியாவில் முதலிடத்தையும், உலகின் 112 தகவல் சட்டங்களில் நான்காவது இடத்தையும் பெற்று ஆசியாவின் சிறந்த தகவல் சட்டமாகக் காணப்படுகின்றது.

பெரும்பாலான நாடுகளில் தகவல் அறியும் உரிமைச் சட்டங்களில் அரச துறைகள் மாத்திரமே உள்ளடக்கப்படுகின்றன. எனினும், இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் பொது நிறுவனங்கள் என்பதில் தனியார் துறையின் அநேகமான பகுதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

---

[3] லேகம்வசம், மேனகா (2016). தகவலறியும் உரிமைச் சட்டத்திற்கான பிரஜைகள் கையேடு, இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், கொழும்பு-05, பக். 09-20

[4] லியனாராச்சி, ஜகத் (2018.09.28). இலங்கை தகவல் சட்டத்தில் காணப்படும் சிறப்பம்சங்கள், வெகுஜன ஊடக அமைச்சு, கொழும்பு, ப.15

தென்னாசியாவில் தனியார் துறையின் ஒரு பகுதியாவது தகவல் உரிமைச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரே சட்டம் இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டமாகும்.

உலகின் சில நாடுகளின் தகவல் அறியும் உரிமைச் சட்டங்களில், சில அரச நிறுவனங்களுக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு விதிவிலக்களிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளதோடு, அவ்வாறு பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு தகவல் கோரிக்கை விடுப்பதற்கு மக்களுக்கு உரிமை இருப்பது மனித உரிமைகள் மீறப்படுதல் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், மோசடிச் சம்பவங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் மாத்திரமேயாகும். எனினும், இலங்கை சட்டத்தின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் தகவல் சட்டத்திற்குள் உட்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பிரவேசத்தை ஏற்படுத்துவதற்கு தடை செய்யப்பட்டுள்ள எந்தவொரு தகவலும் கிடையாது. இச்சட்டத்தின் கீழ் இருப்பது 'பிரவேசத்தை நிராகரிக்கும் சந்தர்ப்பங்கள்' மாத்திரமேயாகும்.

அநேக நாடுகளில் தகவல் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள தகவல் ஆணைக்குழுவிற்கு குறித்த தவறுகளுக்காகத் தண்டனை வழங்குதல், விசேடமாக அபராதம் மற்றும் இழப்பீடுகளை நிர்ணயிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இலங்கையின் தகவல் ஆணைக்குழுவிற்கு அவ்வாறான அதிகாரங்கள் சட்டத்தின் மூலம் வழங்கப்படவில்லை.

அவை மாத்திரமன்றி, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விதிகளில் இல்லாவிட்டாலும் தகவல் அதிகாரிகளாக இலங்கையில் நியமிக்கப்பட்டிருப்பது குறித்த நிறுவனத்தின் இரண்டாவது சிரேஷ்ட அதிகாரிகளாவர். இந்நிலை அநேக நாடுகளில் காண முடியாத சிறப்பான நிலையாகும்.

இத்தகைய தகவல் அறியும் உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு பெரும்பாலான நாடுகள் ஒரு வருடமோ அல்லது இரண்டு வருடங்களையோ எடுத்துள்ளன. சில நாடுகள் அக்காலத்தை மேலும் நீடித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களையும் அவதானிக்க முடிகின்றது. இலங்கையில் இச்சட்டம் முழுமையாக அமுல் செய்யப்படும் தினம் முதல் ஆறு மாதத்திலிருந்து ஒரு வருடம் வரையான காலத்தினுள் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரினால் வர்த்தமானியில் பிரசுரித்து அறிவிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது. எனினும், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் முதலாவது ஆறு மாதத்தினுள்ளேயே குறித்த அறிவித்தலை வர்த்தமானியில் அறிவித்து சட்டத்தை முழுமையாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றரீதியில், மிகக்குறைந்த காலத்தினுள் இச்சட்டத்தை அமுல்படுத்திய நாடுகளுள் இலங்கை முதலிடத்தை வகிக்கின்றது.

## 02. முன்னைய ஆய்வுகள் மீதான பார்வை

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் உலகின் பல நாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள், ஆய்வுப்புலத்திற்கு நெருக்கமான சில கீழே தரப்படுகின்றன.

"தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பயன்பாடு மற்றும் அமுலாக்கம் தொடர்பான ஒரு பகுப்பாய்வு : இந்தியாவின் குவாலியர் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டது" என்ற ஆய்வானது, தமேந்திர சிங் சௌஹான் (Dhamendra Singh Chouhan) என்பவரினால் குவாலியர் பல்கலைக்கழகத்தில் கலாநிதிபட்டப் ஆய்விற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.[5] இவ் ஆய்வானது தகவல் அறியும் உரிமையின் பயன்பாடு மற்றும் செயற்பாடுகள் குறித்து பகுப்பாய்வு செய்கின்றது. குவாலியர் நகரில் புதிய சட்டமான தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிய விழிப்புணர்வு எவ்வாறு உள்ளது என்பது பற்றிய செயற்பாட்டு அம்சங்களில் இந்த ஆய்வு கவனம் செலுத்தியுள்ளது.

2009ஆம் ஆண்டு பங்களாதேஷில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கம் என்ற ஆய்வானது, ஹெரால்ட் சௌகாடோ பரோய் (Harold Sougato Baroi) என்பவரால் முதுகலைமாணிப் பட்டத்திற்காக 2013ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.[6] யூனியன் பரிஷத் (Union Parishad) நிர்வாக அமைப்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கம் மற்றும் செயற்பாட்டை அடிப்படையாகக்கொண்டு தகவல் அறியும் உரிமையின் கொள்கைத்தரங்கள், குறிக்கோள்களை இச்சட்டத்தைச் செயற்படுத்துபவர்களும் இலக்கு மக்களும் எந்தளவிற்கு புரிந்து கொள்கின்றார்கள் என்பதையும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்த எந்தளவிற்கு செயற்பாட்டுக் கட்டமைப்பின் ஒத்துழைப்பும், அர்ப்பணிப்பும் காணப்படுகின்றது என்பதையும், யூனியன் பரிஷத் மட்டத்தில் தகவல் அறியும் முயற்சியை செயற்படுத்தக் கிடைக்கும் மனிதவளங்கள் மற்றும் நிதி ஆதாரங்களினடிப்படையில் வளங்களை ஆராய்தல் தொடர்பாகவும், யூனியன் பரிஷத் மட்டத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தை செயற்படுத்த பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நிலைமைகளையும், யூனியன் பரிஷத் நோக்கி தகவல் அறியும் உரிமை சட்டத்தை முன்னெடுத்து செல்லும் இலக்கு குழுவின் முயற்சிகளை கண்டறிதல் எனப் பல நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் நடைமுறைப்படுத்துகையும் நிர்வாகத்தில் அதன் செல்வாக்கும் - கர்நாடகாவின் இறைவரித் திணைக்களங்கள் மற்றும் கல்வித்

---

[5] Dharmendra Singh Shouhan , "An Analytical Study of Use and Implementation of Right to Information : With Reference to Gwalior City, School of Studies in Political Science and Public Administration", Unpublished Doctoral Thesis, Jiwaji University, Gwalior, India

[6] Harold Sougato Baroi, (2013). "Implementation of Right to Information Act, 2009 in Bangladesh: A Study on Union Parishad", Unpublished Master's Thesis, Department of Administration and Organization, University of Bergen, Norway

திணைக்களங்களை அடிப்படையாகக்கொண்ட என்ற ஆய்வுக் கட்டுரையானது, பேராசிரியர் சப்னா சடாஷ் (Prof. Sapna Chadah) என்பவரினால் 2015ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்டது.[7] இந்த ஆய்வானது, கல்வியியல் கல்லூரிகள் மற்றும் வருவாய்த்துறையில் பொதுமக்கள் பங்களிப்புடன் தகவல் அறியும் உரிமையைத் திறம்படச் செயற்படுத்துதல், நிறுவனத்தில் புதிய பயனுள்ள செயலாக்கம் மற்றும் தகவல் அறியும் உரிமை தொடர்பான நடைமுறைகளை கண்டறிதல், தகவல் அறியும் உரிமைச் சட்ட செயலாக்கத்தின் பின்னரான வாழ்க்கை நிலைமைகள் மற்றும் தனியார் கல்வியியல் கல்லூரிகள், துணை ஆணையர் அலுவலகம், வருவாய்த்துறையிலுள்ள தலூக்கா அலுவலகம் என அனைத்திலும் உள்ள தகவல் அறியும் உரிமைச் சட்ட அமுலாக்கத்தை கண்டறிதல், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் சிறந்த நடைமுறைகள் மற்றும் வருவாய்த்துறை மற்றும் கல்லூரிகளில் பொது தகவல் அதிகாரிகளின் மாறிவரும் பங்கை அந்தந்த வழக்கமான வேலைகளுடன் ஆய்வு செய்தல், தகவல் அறியும் உரிமை திறம்பட செயற்படுவதற்கு அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை சீராக இயங்குவதற்கான தகவல் அறியும் உரிமை சட்ட செயல்முறைகளுக்கான புதிய வழிகளை கண்டறிதல் போன்றவற்றை நோக்காகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டமும் இரகசியத்தன்மையும் - உரிமைகளை சமப்படுத்துதல் மற்றும் முரண்பாடுகளை முகாமை செய்தல் என்ற ஆய்வானது, டேவிட் பனிஷேர் (David Banisar) என்பவரினால் 2011ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட ஆய்வாய்வுக் கட்டுரையானது[8] தனியுரிமை மற்றும் தகவல் அறியும் உரிமையை நிர்வகிப்பது மற்றும் சமநிலைப்படுத்துவதற்கும் கட்டமைப்பு வழிமுறைகள் சிறந்தது என்பதை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப யுகத்திலும் தனியுரிமை மற்றும் தகவல் உரிமை என்பன அடிப்படை மனித உரிமைகளாகும். இத்தகைய இரு விடயங்களையும் சிறப்பாக கொண்டு இயங்கும் அரசாங்கம் பொறுப்பு வாய்ந்ததும் தனித்தன்மை வாய்ந்ததுமாகும். ஆனால், இது சாத்தியமற்ற விடயமாகும். தனியுரிமை மற்றும் தகவல் உரிமையை நிர்வகிப்பதற்கும், சமநிலைப்படுத்துவதற்கும் கட்டமைப்பு வழிமுறைகள் சிறந்தவை என்பதை இவ்வாய்வு குறிப்பிடுகின்றது.

சஞ்சீவ் சிங் பஹுதூரியா மற்றும் கலாநிதி மோஹிட் சர்மா (Sanjiv Singh Bhadauria and Dr. Mohit Sharma) ஆகியோர் 2017ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட தகவல் அறியும் உரிமை : சாதகம் மற்றும் பாதகம் என்ற ஆய்வுக் கட்டுரையில்[9] தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில்

---

7 Dharanesha, S.T. (2015). "Implementation of Right to Information and Impact on Administration: A Case Study of Collegiate Education and Revenue Department in Karnataka", Department of Personnel and Training, India

8 David Banisar, (2011). "The Right to Information and Privacy Balancing Rights and Managing Conflicts", UK.

9 Sanjiv Singh Bhadauria, Mohit Sharma, (2017). "Right to Information Pros & Cons", Amity University, Gwalior, India

காணப்படும் நன்மைகள் மற்றும் தீமைகளை பகுதி பகுதியாக விபரித்துள்ளனர். தகவல் அறியும் உரிமையின் கருத்தியல் கட்டமைப்பு முதன்னிலைப்படுத்துதல், ஆளுகையை மேம்படுத்துவதில் உள்ள பங்கு, நிர்வாகத்தில் தகவல் அறியும் உரிமைக்கான விதிமுறைகளுடன் தொடர்புடைய சிக்கல்கள் ஆகியவற்றை முதன்னிலைப்படுத்துவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய்வுக் கட்டுரையில் தகவலறியும் உரிமையின் பல்வேறு தடைகள் மற்றும் வரம்புகள் பற்றி விவாதிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

எவ்வாறாயினும், இலங்கையில் அரச நிர்வாகக் கட்டமைப்புக்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கம் தொடர்பில், அதிலும் குறிப்பாக வடமாகாணத்தில் சட்டத்தின் அமுலாக்கம் தொடரிபில் ஆழமான, கல்விசார் ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படாத நிலையில் "அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கம் : யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு" என்னும் இந்த ஆய்வு ஓர் முன்னோடி ஆய்வாக அமையப்பெறுகிறது.

## 03. ஆய்வுப் பிரச்சினை

தகவல் அறியும் உரிமை சட்டம், இலங்கை அரசாங்க நிறுவனங்களில் நடைமுறை அமுலாக்கத்தில் மந்தநிலையில் இயங்குவதோடு இச்சட்டம் பற்றிய விழிப்புணர்வு காணப்பட்ட போதும் அதனை கருத்திற்கொள்ளாது அரசாங்க அதிகாரிகள் செயற்பட்டு வருகின்றமை பலதரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. பல அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமை சட்டத்தை அமுலாக்கக் கூடிய அதிகார ஒழுங்கமைப்புக்களும் தகவல்களை வழங்குவதற்கான ஒழுங்கமைப்புக்களும் சீராக இன்மையால், தன்னார்வமாக முற்கூட்டியே தகவல்கள் மக்களுக்கு வெளிப்படுத்தப்படுவதில்லை. இத்தகைய குறைபாடுகள் காணப்படுவதற்கு தகவல் அறியும் உரிமை சட்ட ஆணைக்குழுவின் அனுசரணை முழு வீச்சுடன் இச்சட்ட அமுலாக்கத்திற்கு காணப்படாமையும் ஒரு காரணமாகும்.

மேற்குறித்த நிலைமைகள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அவதானிக்கப்பட்டதோடு, அவற்றுக்கான காரணங்கள் தொடர்பிலே வலுவான வாதப்பிரதிவாதங்களும் எழுந்து வருகின்றன.

"பல்வேறு முன்னேற்றங்கள் காணப்படுகின்ற போதும் பல பகிரங்க அதிகாரசபைகளால் இன்னும் தகவல் உத்தியோகத்தரோ அல்லது குறித்தளிக்கப்பட்ட அதிகாரியோ நியமிக்கப்படவில்லை என்பதை ஆணைக்குழு கவனத்தில் கொண்டுள்ளது. அத்துடன் பகிரங்க அதிகாரசபைகள் கோரப்பட்ட தகவலை வழங்குவதற்கு சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கால எல்லைக்கு அப்பால் கால நீடிப்பு கோரிக்கை முன்வைப்பதையும் ஆனைக்குழு அவதானித்துள்ளது" என்பதனை 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஊடக அறிக்கை உறுதிப்படுத்துகிறது. எனவே, இந்த விடயங்களின் ஊடாக அரசாங்க நிறுவனங்கள்

எந்தளவிற்கு வினைத்திறனுடன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றன என்பதனை ஆராய்வது அவசியமாகிறது. இவற்றைவிட, "தகவல் பெறச் செல்லும் பொதுமக்களை சுற்றவிடும் சங்கானைப் பிரதேச செயலகம்" என்னும் தலைப்பில் 2019.02.16 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியாகிய கட்டுரை மேலும் ஆய்வாளரின் ஆய்வின் பிரச்சினையை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

## 04. ஆய்வு வினாக்கள்

தகவல் அறியும் உரிமைச் சட்டம் எந்தளவிற்கு அரச நிறுவனங்களில் அமுலாக்கத்தில் உள்ளது?, தகவல்கள் எவ்வாறு வழங்கப்படுகின்றன?, அவற்றுக்கான பொறிமுறைகள் யாவை?, தகவல் அறியும் உரிமைச் சட்டம் அமுலாக்க நிலையில் நேர்த்தியாகவும், தெளிவாகவும் இயங்குகின்றதா?, அரசாங்க நிறுவனங்களில் தகவல்களை வழங்குவதற்கான ஒழுங்கமைப்புக்கள் காணப்படுகின்றனவா?, தகவல் அறியும் உரிமை சட்டத்தை அமுலாக்க கூடிய அதிகார ஒழுங்கமைப்புக்கள் காணப்படுகின்றனவா?, தகவல் அதிகாரிகள் போதுமான அளவு நியமிக்கப்பட்டுள்ளனரா? அவர்களுக்கான சவால்கள் யாவை?, தகவல்கள் அனைத்தும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ளனவா?, அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆணைக்குழுவின் செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன?, ஏற்கனவே நாட்டில் காணப்படும் சட்டத்திட்டங்களும், அரசாங்க ஊழியர்களின் நடத்தைகளும் எவ்வாறு தகவல் அறியும் உரிமைச் சட்ட செயற்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன? மற்றும் அரசாங்க நிறுவனங்களில் முற்கூட்டியே தகவல்கள் வெளியிடப்படுகின்றனவா? ஆகியன ஆய்வாளரால் ஆய்வின் வினாக்களாக முன்வைக்கப்பட்டன.

## 05. ஆய்வின் நோக்கங்கள்

தகவல் அறியும் உரிமைச் சட்டம் எந்தளவிற்கு அரச நிறுவனங்களில் அமுலாக்கத்தில் உள்ளது, தகவல் எப்படி வழங்கப்படுகின்றன, அதற்கான பொறிமுறைகள், தகவல் அறியும் உரிமைச் சட்டம் அரசாங்க நிறுவனங்களில் சரியாக இயங்குகின்றதா, தெளிவாக இயங்குகின்றதா ஆகியவற்றைக் கண்டறிதல், அரசாங்க நிறுவனங்களில் தகவல்களை வழங்குவதற்கான ஒழுங்கமைப்புக்கள் காணப்படுகின்றனவா இல்லையா என்பதை இனங்காணல், தகவல் அறியும் உரிமை சட்டத்தை அமுலாக்கக் கூடிய அதிகார ஒழுங்கமைப்புக்கள் காணப்படுகின்றனவா என்பதை இனங்காணல், தகவல் அதிகாரிகள் போதுமான அளவு நியமிக்கப்பட்டுள்ளனரா, அவர்களுக்கான சவால்கள் யாவை என்பதைக் கண்டறிதல், தகவல்கள், தரவுகள் அனைத்தும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிதல், தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆணைக்குழுவின் செயற்பாடுகள் எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிதல், ஏற்கனவே நாட்டில் காணப்படும் சட்டத்திட்டங்களும், அரசாங்க ஊழியர்களின் நடத்தைகளும் எவ்வாறு தகவல் அறியும்

உரிமைச் சட்டச் செயற்பாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதை மதிப்பிடுதல் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் முற்கூட்டியே தகவல்கள் வெளியிடப்படுகின்றனவா என்பதைக் கண்டறிதல் ஆகியன இவ்வாய்வின் நோக்கங்களாக ஆய்வாளரினால் முன்வைக்கப்பட்டன.

## 06. ஆய்வு முறையியல்

ஆய்வின் பிரச்சினையும், ஆய்வின் தன்மையுமே ஆய்வு முறையியலைத் தீர்மானிக்கின்றன. பிரச்சினைகளை இனங்காண்பதும் அதற்கு மீள்வடிவம் கொடுப்பதும் ஆய்வின் தொடக்கமாகின்றது. ஆய்விற்குரிய முறையியல் தேர்ந்தெடுக்கப்பட்டு அதனடிப்படையிலேயே தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. தரவுகள் உரிய முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆராயப்படுகின்றன. இவ்வாய்வு முறையியலானது பிரதானமாக இரு முறைகளில் மேற்கொள்ளப்படும். ஒன்று எண்சார் ஆய்வு மற்றையது பெறுதிசார் ஆய்வு ஆகும். இங்கு ஆய்வாளரால் பெறுதிசார் ஆய்வினூடான தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

1. பெறுதிசார் ஆய்வு

இலங்கையில் ஏறத்தாழ நான்கு வருட வரலாற்றைக் கொண்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட அமுலாக்கம் ஊடாக அரசாங்க நிறுவனங்களில் தகவல்களை எவ்வாறு வழங்கப்படுகின்றன, அவற்றை வழங்குவதற்கான பொறிமுறைகள் என்ன என்பதை கண்டறியவும், இச்சட்டத்தை நேர்த்தியாகவும், தெளிவாகவும் அமுல்படுத்தப்படுவதற்கு அரசாங்க நிறுவனங்களில் தகவல் அதிகாரிகள் போதுமானளவு நியமிக்கப்பட்டு உள்ளனரா, அவ்வாறெனில், அவர்கள் எவ்வாறு தங்களின் கடமைகளை புரிகின்றனர் என்பதோடு வரும் சவால்களை எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பதையும் கண்டறிவதற்கு ஆய்வாளரால் அளவைசார் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 07. ஆய்வின் கருதுகோள்

"அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமை சட்டத்தை அமுலாக்கக் கூடிய அதிகார ஒழுங்கமைப்புக்கள் மற்றும் தகவல்களை வழங்குவதற்கான ஒழுங்கமைப்புக்கள் சீராக இன்மையால் தகவல்கள் தன்னார்வமாக முற்கூட்டியே வெளிப்படுத்தப்படுவதில்லை. ஏற்கனவே நாட்டில் காணப்படும் சட்டதிட்டங்களும், அரசாங்க நிர்வாகக் கட்டமைப்புக்களில் தகவல் வழங்கும் வழக்கமின்மையும் தகவல் அறியும் உரிமை சட்டம் சிறப்பாக இயங்கத் தடையாக உள்ளன" என்பது ஆய்வின் கருதுகோளாக ஆய்வாளரால் முன்வைக்கப்பட்டது.

## 08. மாதிரிகள் வடிவமைப்பு

இச்சட்டம் கடந்த நான்கு வருடமாக அரசாங்கக நிறுனங்களில் அமுலில் உள்ளது. அரசாங்க நிர்வாகக் கட்டமைப்புக்களில் தகவல் அறியும் உரிமை சட்டத்தை அமுலாக்குவதிலுள்ள போக்கினை ஆராயும் திட்டத்திற்கமைவாக, ஆய்வாளரால் யாழப்பாண மாவட்ட அடிப்படையிலான உயர்நிலைக் கட்டமைப்பு நிறுவனமான யாழ்ப்பாண மாவட்டச் செயலகமும்,

அதற்கு அடுத்தநிலையில் உள்ள நிர்வாக அலகான பிரதேச செயலகமும் என இரண்டு நிலைகளிலும் தலா ஒவ்வொரு அலுவலகங்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டன.

இங்கு மத்திய அரசாங்க அலுவலகங்கள் மட்டுமே ஆய்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்டன. மாகாண சபையின் கீழ் இயங்கும் அரசாங்க அலுவலகங்கள் தெரிவுசெய்யப்படவில்லை. இதனடிப்படையில் ஆய்வாளரின் இயலுமையைக் கருத்திற்கொண்டு, யாழ்ப்பாண மாவட்டச் செயலகமும், நல்லூர் பிரதேச செயலகமும் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டன.

## 08.1 தரவு சேகரிப்பு

அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கம் எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிய ஆய்விற்கான முதனிலைத் தரவு சேகரிப்புக்காக அவதானிப்பு, நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல் ஆகிய ஆய்வுக்கருவிகள் மூலம் தரவுகள் திரட்டப்பட்டன. இவ்வாய்விற்காக தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலும், நல்லூர் பிரதேச செயலகத்திலும் தகவல் உத்தியோகத்தர்களிடம் நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டன.

இங்கு ஆய்விற்கான இரண்டாம் நிலைத்தரவுகளாக பிற நாடுகளிலும், இலங்கையிலும் வெளியிடப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான ஆய்வுகள், ஆய்வுக் கட்டுரைகள், தகவல் அறியும் உரிமைச் சட்ட நூல்கள் மற்றும் கையேடுகள் பயன்படுத்தப்பட்டன. அண்மைக்காலமாக தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக பிரசுரமாகிய செய்திகள், செய்திக்கட்டுரைகள் போன்றனவும் ஆய்விற்காகப் பயன்படுத்தப்பட்டன. மேலும், இச்சட்டத்தின் அடித்தளமான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசால் வெளியிடப்பட்ட 2016ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்ட வர்த்தமானி அறிவித்தலிலிருந்தும் தகவல்கள் திரட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டன. இத்தகைய இரண்டாம் நிலைத்தரவுகளினையும் அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வின் தரவுப் பகுப்பாய்வு ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்ட மத்திய அரசாங்க அலுவலகங்களான யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகம் ஆகியவற்றில் 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரையிலான ஒரு வருட காலத்தில் கிடைக்கப்பெற்ற தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கைப் பெறப்பட்டு எண்சார்ந்த பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், அந்நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கம் எவ்வாறு காணப்படுகின்றது என்பதையும் அடிப்படையாகக்கொண்டு பெறுதிசார்ந்த ஆய்வானது ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்டன. நேரடி அவதானிப்பு, நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல் ஆகிய ஆய்வு முறையியலைப் பயன்படுத்தி பெறப்பட்ட தகவல் மற்றும் தரவுகள் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டன.

## 09. தரவுப் பகுப்பாய்வு

### 9.1 விண்ணப்பங்கள் ஏற்பும் நிராகரிப்பும்

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு நேரடியாகவும், தபால் மற்றும் மின்னஞ்சல் மூலம் 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரை விண்ணப்பிக்கப்பட்ட தகவல் கோரிக்கை விண்ணப்பங்களின் எண்ணிக்கை 152 ஆகும். இவ்விண்ணப்பங்கள் யாவற்றுக்கும் குறித்த பதினான்கு வேலை நாட்களுக்குள் பதிலளிக்கப்பட்டுள்ளன. குறித்த வருடத்தில் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் தங்களால் வழங்க இயலாத தகவல்கள் என குறிப்பிட்டுப் பதில் அனுப்பப்பட்ட ஒரு விண்ணப்பம் மாத்திரமே மேன்முறையீட்டுக்காக சென்றுள்ளது. இதன் தீர்ப்பு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு சாதகமாகவே அமைந்தது.[10] யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தை பொறுத்தவரையில் அங்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களில் ஏனைய நிறுவனங்களின் விண்ணப்பங்கள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. குறித்த காலப்பகுதியில் தங்களுக்கான விண்ணப்பங்கள் அனைத்துக்கும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் பதிலளித்திருக்கின்றது. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கடந்த 2017ஆம் ஆண்டு 67 தகவல் விண்ணப்பங்களே கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றை விட 2018ஆம் ஆண்டு தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நல்லூர் பிரதேச செயலகத்தை பொறுத்தவரையில் 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரை 28 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. கடந்த 2017ஆம் ஆண்டு 5 விண்ணப்பங்களே மொத்தமாக தகவல்கோரி இங்கு கிடைக்கப்பெற்றிருந்தன. 2018ஆம் ஆண்டு தகவல் கோரிக்கை விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. இவ்விண்ணப்பங்கள் அனைத்துக்கும் பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன. மேன்முறையீட்டுக்கு எவ்வித விண்ணப்பமும் செல்லவில்லை.[11]

### 9.2 அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை அமுலாக்கக் கூடிய அதிகார ஒழுங்கமைப்புக்கள்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் 'ஒவ்வொரு பொது அதிகாரசபையும் ஒரு தகவல் அலுவலரைக் கொண்டிருக்கவேண்டும். சில பொது அதிகாரசபைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தகவல் அலுவலர்களும் காணப்படுவர்'[12] என்பதற்கமைய யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் தகவல் உரிமைச் சட்டப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு, அங்கு அபிவிருத்தி இணைப்பாளர் ஒருவரும் பொது முகாமைத்துவ அதிகாரி ஒருவரும் தகவல் உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுகின்றனர். இங்கு, குறித்தளிக்கப்பட்ட அதிகாரியாக

---

[10] யாழினி, என். தகவல் அலுவலர் (அபிவிருத்தி இணைப்பாளர்), தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு, யாழ்ப்பாண மாவட்ட செயலகம், நேர்காணல்: 01.03.2019, நேரம்: 13.00.

[11] சத்தியமூர்த்தி, ஆ. தகவல் அலுவலர் (நிர்வாக உத்தியோகத்தர்), நல்லூர் பிரதேச செயலகம், நேர்காணல்: 28.02.2019, நேரம்: 14.00.

[12] லேகம்வசம், மேனகா (2016). தகவலறியும் உரிமைச் சட்டத்திற்கான பிரஜைகள் கையேடு, இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், கொழும்பு-05, ப.31

அரசாங்க அதிபர் காணப்படுகின்றார். நல்லூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் குறித்தளிக்கப்பட்ட அதிகாரியாகவும், நிர்வாக உத்தியோகத்தர் தகவல் அலுவலராக கடமையாற்றுகின்றார். அரசாங்க நிறுவனமான யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலும், நல்லூர் பிரதேச செயலகத்திலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை அமுலாக்கக் கூடிய அதிகார ஒழுங்கமைப்புக்கள் காணப்படுகின்றன.

### 9.3 அரசாங்க நிறுவனங்களில் காணப்படும் தகவல் வழங்குவதற்கான ஒழுங்கமைப்புக்கள்

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கென தனியான ஓர் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, இங்கு வரும் விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்பங்கள் இலவசமாகவும் வழங்கப்படுகின்றன. இரு அரசாங்க நிறுவனங்களிலும் நேரிலும், தபால் மூலமும், மின்னஞ்சல் மூலமும் தகவல்கள் கோரப்படுகின்றன. பிரஜைகள் கோரும் வடிவத்திலேயே தகவல்கள் வழங்கப்படுகின்றன.[13] தகவல்கள் குறித்த பதினான்கு வேலை நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும் என்பதும், தகவல் வழங்குவதற்கான கால எல்லையை நீடிக்க வேண்டுமாயின், குறித்த பிரஜையிடம் அறிவிக்க வேண்டும் என்பதும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டத்தில் குறிப்பிடப்பட்டதைப் போன்று, இரு அரசாங்க நிறுவனங்களிலும் தகவல் குறித்த பதினான்கு வேலை நாட்களுக்குள் வழங்கப்படுவதோடு, ஏற்புப்படிவமும் உடனுக்குடன் வழங்கப்படுகின்றது. கால எல்லை நீடிக்கும் தேவை இருப்பின், கடிதம் அல்லது தொலைபேசி மூலமாக தகவல்கோரியவருக்கு அது அறிவிக்கப்படுகின்றது.

எழுத, வாசிக்க இயலாத நபர்கள் தகவல் கோரி வரும் சந்தர்ப்பங்களில் வாய்மொழி மூலமாக விடயங்களை கேட்டறிந்து விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்திக் கொள்கின்றனர். யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மின்னஞ்சல் மூலமாக தகவல்கள் ஓரளவு வழங்கப்பட்டு வருகின்றன.[14]

யாழ்ப்பாண மாவட்ட செயலகம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகத்தில் தகவல் வழங்குவதற்கான ஒழுங்கமைப்புக்கள் சிறப்பாகக் காணப்படுவது நேரடி அவதானிப்பின் மூலமும், நேர்காணல்களின் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டது.

### 9.4 அரசாங்க நிறுவனங்களில் பதிவுகள் பேணப்படும் முறைமைகள்

அரசாங்க நிறுவனங்களில் பதிவுகள் பேணப்படும் முறைமைகள் இன்றும் அதிகமாகக் கோப்பு வடிவிலேயே காணப்படுகின்றன. சட்டத்தின் பிரகாரம் முடிந்தவரை தகவல்கள் இலத்திரனியல் முறைமைக்கு மாற்றியமைக்கப்பட வேண்டும். ஆனால், அவற்றுக்கான தொழில்நுட்ப வசதிகள்

---

[13] யாழினி, என். தகவல் அலுவலர் (அபிவிருத்தி இணைப்பாளர்), தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு, யாழ்ப்பாண மாவட்ட செயலகம், நேர்காணல்: 01.03.2019, நேரம்: 13.00.

[14] யாழினி, என். தகவல் அலுவலர் (அபிவிருத்தி இணைப்பாளர்), தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு, யாழ்ப்பாண மாவட்ட செயலகம், நேர்காணல்: 01.03.2019, நேரம்: 13.00.

குறைவாகக் காணப்படுவதாலும், ஆளணிக் குறைபாட்டாலும் இன்றும் முழுமையாகத் தகவல்கள் இலத்திரனியல் முறைமைக்கு மாற்றியமைக்கப்படவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது. ஆய்வாளரால் ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலும் நல்லூர் பிரதேச செயலகத்திலும் பதிவுகள் இலத்திரனியல் முறைக்கு தற்போதே மாற்றப்பட்டு வருகின்றன. முழுமையான மாறுதல்கள் இன்னும் இடம்பெறவில்லை. வளப்பற்றாக்குறைகள் காணப்படுவதாலும், அரச அதிகாரிகளுக்கு வேலைப்பளு அதிகமாகக் காணப்படுவதாலும் பதிவுகளை இலத்திரனியல் முறைக்கு மாற்றுவதில் தாமதங்கள் காணப்படுகின்றன.[15] இவ்விரு அரசாங்க நிறுவனங்களிலும் தகவல் கோரிக்கை விண்ணப்பங்கள் யாவும் கையேட்டு முறையில் 2017ஆம் தொடக்கம் தகவல் கோரிக்கைப் பதிவேட்டில் பதியப்பட்டு, விண்ணப்பங்கள் யாவும் வரிசைக்கிரமமாகக் கோப்பாகச் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

### 9.5 அரசாங்க நிறுவனங்களில் தகவல்களின் முற்கூட்டிய வெளிப்படுத்துகை

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம், அரசாங்க நிறுவனங்கள் பொதுமக்கள் தகவல்களை கோரும்வரை காத்திராது, தகவல்களைத் தன்னார்வமாக முற்கூட்டியே வழங்கவேண்டும் என்று சட்டத்தின் 8ஆம், 9ஆம் பிரிவுகளிலும் 20ஆவது பிரிவிலும் கூறப்பட்டுள்ளது.[16] ஆனால், ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட செயலகம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகம் ஆகிய இரு நிறுவனங்களிலுமே இத்தகைய முற்கூட்டிய வெளிப்படுத்துகை என்பது குறைவாகவே இடம்பெறுகின்றது. விளம்பரப்பலகைகள், பத்திரிகை விளம்பரங்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி, பகிரங்க அறிவித்தல்கள் மற்றும் சமூக ஊடகங்கள் என அனைத்திலும் முற்கூட்டியே தகவல்களை மக்களுக்கு வழங்கலாம். இவ்விரு நிறுவனங்களிலும் காட்சிப்படுத்தல் பலகைகள், பத்திரிகைப் பிரசுரங்கள், விளம்பரப் பலகைகள் மற்றும் பொதுமக்கள் அறிவிப்புப் பலகைகளிலேயே முற்கூட்டிய வெளிப்படுத்துகை ஓரளவு முன்னெடுத்து வரப்படுவதைக் காணலாம். இணையத்தளங்களில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் ஓரளவுக்கு முற்கூட்டிய தகவல்களை மக்களுக்கு வழங்கினாலும், நல்லூர் பிரதேச செயலகத்தில் அவ்வாறான முயற்சி மந்தகதியிலேயே உள்ளது.

### 9.6 அரசாங்க நிறுவனங்களில் தகவல் அதிகாரிகளின் செயற்பாடுகள்.

நேரடியாகவும், தபால் மற்றும் மின்னஞ்சல் மூலமும் வரும் விண்ணப்பங்களைச் சேகரித்து, அவற்றுக்கான பதில்கள் பதினான்கு நாட்களுக்குள் வழங்குதல், பதினான்கு நாட்களுக்கு அதிகமான நாட்கள் தகவல் வழங்குவதற்கு தேவைப்படுமிடத்து குறித்த விண்ணப்பதாரிகளுக்கு கடிதம் மூலம் அல்லது தொலைபேசி மூலம் அறிவித்தல்

[15] சத்தியமூர்த்தி, ஆ. தகவல் அலுவலர் (நிர்வாக உத்தியோகத்தர்), நல்லூர் பிரதேச செயலகம், நேர்காணல்: 2019.02.28, 14.00.

[16] இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம், (2016 ஆகஸ்ட் 05). 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச்சட்டம், இலங்கை அரசாங்கத் திணைக்களம், பிரிவு (8)(9)(20)

வழங்கப்படுகின்றது. மேலும், கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் தகவல் கோரிக்கைப் பதிவேட்டில் பதியப்பட்டு, விண்ணப்பங்கள் கோப்பாகச் சேகரிக்கப்படுகின்றன. இவற்றைவிட, தங்கள் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்படும் ஏனைய நிறுவனங்களுக்கான விண்ணப்பங்கள் குறித்த நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. எழுத வாசிக்க இயலாத அல்லது தகவல் கோரும் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்த இயலாத நபர்களின் விடயங்கள் வாய்மொழி மூலமாக கேட்டறியப்பட்டு விண்ணப்பப்படிவதில் எழுதுதல் மற்றும் விண்ணப்ப வடிவில் வராத தகவல்கோரும் கடிதங்களையும் விண்ணப்பப் படிவத்தில் பூரணப்படுத்தல் வேண்டும். தகவல் கோரிக்கை விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டதற்கான ஏற்புப் படிவம் உடனடியாக வழங்கப்படுதல் வேண்டும் ஆகியன பின்பற்றப்படுவதும் அவதானிக்கப்பட்டது.

### 9.7 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது தகவல் அதிகாரிகள் எதிர்கொள்ளும் சவால்கள்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது பல சவால்களை யாழ்ப்பாண மாவட்டச் செயலக மற்றும் நல்லூர் பிரதேச செயலக தகவல் அலுவலர்கள் எதிர்கொள்கின்றனர். அவர்கள் முன்வைத்த முக்கிய சவாலாக அமைவது, பொதுமக்களுக்கு இச்சட்டம் பற்றிய விழிப்புணர்வின்மை என்பதாகும். பல பொதுமக்கள் தனியார் தொடர்பான தகவல்களையும், மூன்றாம் தரப்பு நபரின் தரவுகளையும் வினவுவதோடு, மட்டுப்பாடுகளுக்குள் அடங்கும் விடயங்களையும் வினவுகின்றனர். தகவல்களைக் கோரும் பிரஜைகளுக்கு எவ்வாறான வினாக்களை வினவுவது என்பது பற்றிய தெளிவு குறைவாகவே காணப்படுவதாகத் தகவல் அலுவலர்கள் தெரிவித்தனர்.

பொதுமக்கள் தகவல் கோரும் விண்ணப்பத்துடனேயே நின்று விடுகின்றனர், தகவல்களை வழங்க மறுக்கும் சந்தர்ப்பங்களில், காலதாமதமாகும் சந்தர்ப்பங்களில், தகவல் அதிகாரி விண்ணபத்தை ஏற்க மறுக்கும் சந்தர்ப்பங்களில் அவர்களின் மீது மேன்முறையீட்டை மேற்கொள்ள இயலும் என்பது பலருக்குத் தெரிவதில்லை. சிலருக்கு இவை பற்றி தெளிவு காணப்படினும் அடுத்த கட்டத்துக்குச் செல்ல தயங்குகின்றனர். தகவல் அலுவலர்களால் தீர்க்க இயலாத அல்லது அவர்களுக்கப்பாற்பட்ட விடயங்களுக்காக அவர்களிடம் வந்து நிற்பது அவர்களுக்கான பெரும் சவாலாகும்.[17]

அதேபோன்று, அரசாங்க நிறுவன அதிகாரிகளுக்கு இச்சட்டம் பற்றிய தெளிவின்மை மற்றும் புரிதலின்மை என்பனவும் தகவல் அலுவலர்களுக்குச் சவால்களாக விளங்குகின்றன. இதன் காரணமாக, அதிகாரிகள் தகவல்களை வழங்குவதில் தாமதம் காட்டுவதோடு, தங்களின் பெயருக்கு இழுக்கு ஏற்பட்டுவிடும் என்பதால் பலர் தகவல்களை வழங்க மறுக்கின்றனர். ஏற்கனவே, நாட்டில் காணப்பட்ட சட்டதிட்டங்களும் தகவல்களை வழங்கும் மாற்றத்துக்கு முட்டுக்கட்டையாக உள்ளது. தகவல் அதிகாரிகளுக்கு செயலமர்வுகள் இடம்பெறுவதைப்

---

[17] யாழினி, என். தகவல் அலுவலர் (அபிவிருத்தி இணைப்பாளர்), தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு, யாழ்ப்பாண மாவட்ட செயலகம், நேர்காணல்: 01.03.2019, நேரம்: 13.00.

போன்று இச்சட்டம் பற்றிய அறிவினை ஏனைய அதிகாரிகளுக்கும் வழங்குவது கட்டாயமாக்கப்பட வேண்டும் எனபது தகவல் அலுவலர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.[18] ஏனைய நாடுகளைப் போலல்லாது, இலங்கையில் தகவல் அலுவலர்களாக நிர்வாகத்தில் உயர் பதவியில் பணியாற்றும் உத்தியோகத்தர்களே நியமிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக, இரட்டைச் சுமை இவர்களிடத்தில் காணப்படுகின்றது. இத்தகைய காரணத்தால், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதில் கடினம் காணப்படுகின்றது.[19]

### 9.8 ஆணைக்குழுவுக்கு அரசாங்க நிறுவனங்கள் வருடாவருடம் அறிக்கைகள் சமர்ப்பித்தல்

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் சகல பொது அதிகாரசபைகளுமே பொதுமக்கள் அணுகக்கூடிய விதத்தில் ஆண்டறிக்கைகளை ஆணைக்குழுவிற்கு முறையாக சமர்ப்பிக்க வேண்டும். குறித்த ஆண்டின்போது கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை, தகவல் வழங்கப்பட்ட கோரிக்கைகளினதும் மறுக்கப்பட்ட கோரிக்கைகளினதும் எண்ணிக்கை, குறித்த ஆண்டில் சேகரிக்கப்பட்ட கட்டணங்களின் மொத்தத்தொகை மற்றும் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் தகவல் வழங்கப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை போன்றவற்றை ஆண்டறிக்கை கொண்டிருக்கவேண்டும். அதில் வெளிப்படைத்தன்மையான ஆட்சி முறையின் செயற்திறனை மேம்படுத்துவதற்கான பிரேரணைகள், கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகளின் எண்ணிக்கை, பதிவு பேணல் தொடர்பான நடைமுறைகளும் தகவல்களும் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வறிக்கைகள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தயாரிக்கப்பட்டிருப்பதுடன் இலத்திரனியல் வடிவத்திலும் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இச்சட்டம் நடைமுறைக்கு வந்து மூன்று வருடங்கள் (2016 - 2018) கடந்துவிட்ட நிலையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகம் மூலம் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமை பெரும் குறைபாடாகவே காணப்படுகின்றது. ஆணைக்குழுவிடமிருந்து தற்போதே அதற்கான விண்ணப்பங்கள் அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பொது அதிகாரசபைகளின் செயற்பாட்டுக்கு ஆணைக்குழுவின் பங்களிப்பு இன்றியமையாதது. ஆனால், அரசாங்க நிறுவனங்களின் இத்தகைய அசமந்த போக்கு இச்சட்டத்தின் போக்கை பாதிப்பதை அவதானிக்க முடிந்தது.

## 10. ஆய்வின் முடிவுகளும் பெறுபேறுகளும்

மாவட்டச் செயலகத்தை போன்று பிரதேச செயலகங்களில் தகவல் சட்டப்பிரிவு காணப்படுவதில்லை. ஒருவரே தகவல் அலுவலராகவும், நிர்வாகத்தின் உத்தியோகத்தராகவும்

---

18 சத்தியமூர்த்தி, ஆ. தகவல் அலுவலர் (நிர்வாக உத்தியோகத்தர்), நல்லூர் பிரதேச செயலகம், நேர்காணல்: 28.02.2019, நேரம்: 14.00.

19 சத்தியமூர்த்தி, ஆ. தகவல் அலுவலர் (நிர்வாக உத்தியோகத்தர்), நல்லூர் பிரதேச செயலகம், நேர்காணல்: 28.02.2019, நேரம்: 14.00.

காணப்படுவதால் தகவல் சட்டத்தின் நடைமுறை செயற்பாடுகளில் பாதிப்புக்கள் ஏற்படுவதை ஆய்வாளரால் அவதானிக்கக் கூடியதாக அமைந்தது.

இரு நிறுவனங்களிலும் பதினான்கு வேலை நாட்களுக்குள் தகவல்கள் பிரஜைகளுக்கு வழங்கப்படுவதோடு ஏற்புப் படிவங்களும் குறித்த காலப்பகுதிக்குள் வழங்கப்படுகின்றன. பிரஜைகள் கோரும் தகவல்களை அவர்கள் கோரும் வடிவத்திலேயே வழங்குகின்றனர். அரசாங்க நிறுவனங்களில் பதிவுகள் பேணப்படும் முறைமைகள் இன்றும் அதிகமாகக் கோப்பு வடிவிலேயே காணப்படுகின்றன. சட்டத்தின் பிரகாரம் முடிந்தவரை தகவல்கள் இலத்திரனியல் முறைமைக்கு மாற்றியமைக்கப்பட வேண்டும். ஆனால், அவற்றுக்கான வசதிகள் குறைவாகக் காணப்படுவதாலும், ஆளணிக் குறைப்பாட்டாலும் இன்றும் முழுமையாகத் தகவல்கள் இலத்திரனியல் முறைமைக்கு மாற்றியமைக்கப்படவில்லை என்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தை பொறுத்தவரையில், இலத்திரனியல்முறை மாற்றங்கள் சற்றே இடம்பெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால், நல்லூர் பிரதேச செயலகத்தைப் பொறுத்தவரையில் அவற்றுக்கான எவ்வித ஏற்பாடுகளும் எட்டப்படுவதாக தென்படவில்லை.

ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்ட இரு நிறுவனங்களிலுமே முற்கூட்டிய வெளிப்படுத்துகை என்பது பெருமளவில் இடம்பெறவில்லை. யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் தன்னார்வமாகத் தகவல்களை பத்திரிகைப் பிரசுரங்கள் மூலமும், பகிரங்கக் காட்சிப்படுத்தல்கள் மூலமும், காட்சிப் பலகைகள் மற்றும் பொதுமக்களுக்கான பலகைகளிலும் மேற்கொண்டு வருகின்றது. அதனைவிட, தற்போதே இணையத்தளத்திலும் தன்னார்வமாக முற்கூட்டிய வெளிப்படுத்தல்களை மேற்கொண்டு வருகின்றது. ஆனால், நல்லூர் பிரதேச செயலகத்தில் காட்சிப்படுத்தல் பலகைகள் மூலமே முற்கூட்டிய வெளிப்படுத்தல்கள் இடம்பெறுகின்றன. சில சமயங்களிலேயே பத்திரிகை விளம்பரங்கள் அல்லது பிரசுரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இங்கு தகவல் அதிகாரிகள் தங்களால் வழங்க இயலுமான தகவல்கள் அனைத்தையும் வழங்குவதோடு, மட்டுப்பாடுகளுக்குள் அடங்கும் தகவல்கள், மூன்றாம் தரப்பினரின் தகவல்கள் மற்றும் தனியார் தொடர்பான தகவல்களை கோரும்போது வழங்க மறுப்புத் தெரிவிக்கின்றனர். மறுக்கப்படுவதற்கான காரணம் உரியமுறையில் குறித்த விண்ணப்பதாரிகளுக்கு தெளிவூட்டப்படுகின்றது. கோரப்பட்ட வினாக்கள் சார்பாக சந்தேகங்கள் எழும் பட்சத்தில் ஆணைக்குழுவின் ஆலோசனைகள் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் புலமை வாய்ந்த நபர்களிடம் தெளிவுபடுத்திக் கொள்கின்றனர். இரு அரசாங்க நிறுவன தகவல் அலுவலர்களுமே தங்களுக்கு வரும் விண்ணப்பப்படிவங்களுக்கு குறித்த பதினான்கு நாட்களுக்குள் தகவல்களை வழங்குகின்றனர். ஏற்புப் படிவம் வழங்குதல், கால நீடிப்புக்கான அறிவிப்பு என்பன சீராக மேற்கொள்ளப்பட்டுகின்றன.

நிர்வாகத்தில் உயர் பதவியில் பணியாற்றும் உத்தியோகத்தரே தகவல் அதிகாரி பணிக்கும் நியமிக்கப்படுவதால் அவருக்குரிய வேலைப்பளு அதிகம் இருப்பது அவதானிக்கப்பட்டது. இரு வேலைகளையும் சமாளித்துப் பணிபுரிவது என்பது தகவல் அதிகாரிகளுக்குப் பெரும் சவாலாகக் காணப்படுகின்றது. அரசாங்க நிறுவனங்களில் தகவல் அதிகாரிகள் தனியாக நியமிக்கப்பட வேண்டும். அப்போதே அவர்கள் அச்சட்டத்தின்வழி அதனை நடைமுறைப்படுத்த இயலும். நிறுவனத்தில் உயர்பதவியில் இருக்கும் அலுவலருக்கு இப்பதவியை வழங்குவதால் தகவல் அறியும் சட்டத்தை வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவது சவாலாகவே அமையும்.

இரு அரசாங்க நிறுவனங்களிலும் இதுவரை காலமும் தகவல் ஆணைக்குழுவுக்கான அறிக்கைகள் எவையும் சமர்ப்பிக்கப்படவில்லை. தற்போதே ஆணைக்குழுவிடமிருந்து ஆண்டறிக்கைக்கான மாதிரி அமைப்பு அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இச்சட்டம் அமுல்படுத்தப்பட்டு, மூன்று வருடங்கள் (2016 - 2018) கடந்து விட்ட நிலையில் தகவல் அறியும் ஆணைக்குழு இவ்வாண்டறிக்கை விடயத்தில் கவனம் கொள்ளாது அசமந்தப் போக்கு காட்டியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இச்சட்ட நடைமுறைப்படுத்தலில் பாரிய பொறுப்பு ஆணைக்குழுவுக்கு உள்ளது. ஆனால் அதனை இத்தனை வருடங்களாக நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளதை ஆய்வாளரால் இனங்காணக் கூடியதாக அமைந்தது.

நல்லூர் பிரதேச செயலகத்தை பொறுத்தவரையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்பது அமுலில் உள்ளபோதும் அதன் செயற்பாடுகள் மந்தக்கதியிலேயே காணப்படுகின்றது. இலங்கை அரசாங்க நிறுவனங்களில் தகவல் அலுவலர்களாக அரசாங்க நிறுவனத்தில் உயர்பதவியில் இருப்பவர்களே நியமிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக, அவர்கள் தங்களுக்கான மேலதிக வேலையாகவே இதனைப் பார்ப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. மாவட்டச் செயலகம் என்பது பல பிரதேச செயலகங்களை தன்னுள் கொண்டியங்கும் பாரிய நிறுவனக் கட்டமைப்பாகும். இங்கு இச்சட்டம் ஒரு பிரிவாக கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இங்கு ஏனைய நிறுவனங்களை போலல்லாது தகவல் உத்தியோகத்தர்கள் பலர் கடமையாற்றுகின்றனர்.

இங்கு ஆய்வாளரால் ஆய்விற்குட்படுத்தப்பட்ட யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தனிப்பிரிவாக இயங்குவதோடு, ஒரு சில குறைபாடுகள் காணப்படினும், அதன் செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் சீராக இயங்குவதனை ஆய்வாளரால் அவதானிக்கக் கூடியதாக அமைந்தது. ஆனால், நல்லூர் பிரதேச செயலகத்தைப் பொறுத்தவரையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறையில் உள்ள போதும், சட்டத்துக்கமைய போதிய ஏற்பாடுகள் காணப்படவில்லை. இங்கு தகவல் பெறும் கோரிக்கைகளும் குறைவாகவே காணப்படுகின்றன.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தும் ஊடகவியலாளர்களும், அதனை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் தன்னார்வத்தொண்டு நிறுவனத்தில் பணிபுரியும் உறுப்பினர்களும் சுட்டிக்காட்டியதைப் போன்று சில பிரதேச செயலகங்களில் தகவல் அலுவலர்கள்

நியமிக்கப்படாமலும் உள்ளனர், சில இடங்களில் தகவல் அலுவலர் யார் என்பதே தெரிவதில்லை.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறை செயற்பாட்டுக்கு வந்து மூன்று வருடங்கள் (2016 - 2018) பூர்த்தியடைந்து விட்டபோதிலும், கீழ் மட்டங்களுக்கு முழுமையாக இச்சட்டத்தின் பயன்பாடு சென்றடையவில்லை. மாவட்டச் செயலகத்தைப் போன்று பிரதேச செயலகங்களிலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை அமுலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான ஆலோசனைகள், உதவிகளை ஆணைக்குழு மேற்கொள்ளவேண்டும். தொடர்ந்து செயலமர்வுகளை நடாத்தும் ஆணைக்குழு, தகவல் சட்டத்தின் அமுலாக்கம் எவ்வாறு உள்ளது என்பதையும் கண்காணிக்க வேண்டும். தகவல் கோரிக்கைகள் மட்டுமே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் நோக்கமல்ல. அதில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் அரசாங்க நிறுவனங்களில் அமுலாக்கத்தில் காணப்பட வேண்டும்.

ஆய்வாளரின் அவதானத்தின்படி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கம் நிர்வாக அலகில் மேல் மட்டங்களில் (மாவட்ட மட்டத்தில்) காணப்படுவதைப் போன்று பிரதேச மட்டத்தில் காணப்படாமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

## 11. எதிர்கால ஆய்வுகளுக்கான பரிந்துரைகள்

அந்தவகையில் ஆய்வொன்றினை மேற்கொள்ளும் போது எதிர்கால ஆய்வாளருக்கான பரிந்துரைகள் அத்துறைசார் ஆய்வுகளிற்கு மிக முக்கியமானதொன்றாகும். எதிர்காலத்தில் இவ் ஆய்வுப்பரப்பிலே ஆய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளர் ஆய்வுப்பரப்பினை அதிகரிக்கலாம். ஆய்வாளர் தனது ஆய்விற்காக ஒருவருட கால பகுதியினுள் கிடைக்கப்பெற்ற தகவல் கோரிக்கைகள் ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் குறித்த இவ் ஆய்வுப்பரப்பினை எதிர்காலத்தில் ஆய்வாளர்கள் அதிகரித்துக் கொள்ளலாம்.

இவ் ஆய்வானது அரசாங்க நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கம் எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிவதற்கு மேற்கொள்ளப்பட்டதொன்றாகும். யாழ்ப்பாண மாவட்டத்தை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த பிரதேசம் மற்றும் காலவரையறை என்பன ஆய்வாளரின் தெரிவிற்கமையவே வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் ஆய்வுகள் வெவ்வேறுபட்ட காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டதாகவும், வெவ்வேறு பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் மேலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பயன்பாடு பொதுமக்களிடம் எவ்வாறு காணப்படுகின்றது என்பதையும் அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் ஆய்வினை மேற்கொள்ள முடியும்.

எனவே, மேற்கூறப்பட்ட ஆய்வுத்தளத்திற்கு அப்பால் ஆய்வுப்பரப்பு, ஆய்வின் வரையறைகள், மாதிரித்தெரிவுநிலை போன்ற விடயங்களில் குறித்த இவ் ஆய்விற்கு அப்பால் புதிய

ஆய்வுகளை மேற்கொள்ள முடியும். அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகள் ஆய்வுத்தளத்தில் இருக்கக்கூடியதான வெற்றிடங்களை பூரணப்படுத்தப்படுவதுடன் புதிய அத்தியாயத்தினையும், வேறுபட்ட ஆய்வுகளையும் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

## 12. ஆய்வின் பங்களிப்பு

தகவலறியும் உரிமைச் சட்டம் என்பது அனைவருக்கும் பொதுவான, நாட்டிற்கு மிகவும் அத்தியவசியமான சட்டம் ஆகும். தகவலறியும் உரிமை தொடர்பான சட்டத்தைப் பொது நோக்கத்திற்காக பயன்படுத்தி இலங்கையில் சமூக மேம்பாட்டினை உறுதிப்படுத்த இயலும். தனிப்பட்ட ரீதியிலும், பொதுவாகவும் முகங்கொடுக்கும் அன்றாடப் பிரச்சினைகளில் பலவற்றை தீர்த்துக் கொள்வதற்காக புதிய கருவியான தகவலறியும் உரிமைச் சட்டத்தை மக்கள் வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு, அச்சட்டம் சார்ந்த பொறிமுறைகள் சீராக இயங்க வேண்டும். அது சார்நத பூரண புரிந்துணர்வு மக்கள் மத்தியில் மட்டுமின்றி நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுக்கும் காணப்படுதல் வேண்டும். ஆய்வாளரின் இவ் ஆய்வு தகவலறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கத்தின் வினைத்திறனை முன்வைப்பதோடு, எதிர்காலத்தில் மக்களிடம் இச்சட்டத்தை மேலும் சிறப்பான முறையில் கொண்டு சேர்ப்பதற்கு உதவியாக அமையும்.

**உசாத்துணைகள்**

**ஆங்கிலம்:**


- Borah, Sri Keshabananda (2013). “Right to Information Act A Key to Good Government”, International Journal of Humanities and Social Science Invention, Gauhati University, India.
- Chitra, P. Neelamalar, M. (2013). “Right to Information Act a Tool for Good Governance and Social Change Through Information Technology”, Anna University, India.
- Dharanesha, S.T. (2015). “Implementation of Right to Information and Impact on Administration - A Case Study of Collegiate Education and Revenue Department in Karnataka”, Department of Personnel and Training, India.
- Shouhan, Dharmendra Singh, “An Analytical Study of Use and Implementation of Right to Information: with Reference to Gwalior City”, School of Studies in Political Science and Public Administration, Jiwaji University, Gwalior, India.
- Sougato Baroi, Harold, (2013). “Implementation of Right to Information Act, 2009 in Bangladesh: A Study on Union Parishad”, Department of Administration and Organization, University of Bergen, Norway.
- Yannoukakou, Aikaterini and Araka, Iliana (2014). “Access to Government Information Right to Information and Open Government Data Synergy”, University of Macedonia, Greece.
- https://www.parliament.lk/ta/get-involved/right-to-information
- https://www.slsi.lk/index.php?option=comcontent&view=article&id=79&ltemid=484&lang=ta
- https://www.mfa.gov.lk/tam/web-notice-on-right-to-information
- www.rticommission.lk
- www.slpi.lk/rti-ifficial-application-form

## தமிழ்:


- இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஊடக அறிக்கை, (2018.02.06). இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு, கொழும்பு-07.
- குணதிலக்க, கிஹான் (2014). தகவல் அறியும் உரிமை ஒரு வழிகாட்டி, இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம், கொழும்பு-5.
- தகவல் உரிமைகள் பற்றிய தகவல், (2017). மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், கொழும்பு-5.
- தகவல் பெறச் செல்லும் பொதுமக்களை சுற்றவிடும் சங்கானைப் பிரதேச செயலகம், (2019.02.16). உதயன் நாளிதழ், யாழ்ப்பாணம்.
- தகவல், 2018 ஆம் ஆண்டில் (05.16, 06.13, 07.13, 08.15, 09.12, 09.28, 10.10, 12.26) வெளிவந்தவை, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, கொழும்பு.
- தகவல், 2019 ஆம் ஆண்டில் (01.30, 02.27, 03.27, 04.29, 05.31, 06.27, 07.17, 08.14) வெளிவந்தவை, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, கொழும்பு.
- திருநாவுக்கரசு, எம். (2017). மனித உரிமைகள் மற்றும் நல்லாட்சி திறன்விருத்தி பயிற்சி கைநூல், AFRIEL Association, வவுனியா.
- அம்பாறையில் இடம்பெற்ற முதலாவது பொதுமக்கள் அமர்வு மற்றும் மேன்முறையீட்டு விசாரணைகள் பற்றிய இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் அறிக்கை, (2019.02.05). இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு, கொழும்பு 07.
- லேகம்வசம், மேனகா (2016). தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கான பிரஜைகள் கையேடு, இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம், கொழும்பு-5.
- ரஜீவ விஜேசிங்க, (2013.01.01-15). தகவல் அறியும் உரிமையின் அவசியம், சமகாலம், எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் (பிறைவெட் லிமிட்டட்), இலங்கை.
- லியன ஆராச்சி, ஜகத் (2016). வலுவூட்டப்பெற்ற பிரசைகள் வாக்காளர் மனநிலையிலிருந்து பிரசைகள் என்ற மனநிலையை நோக்கி, ப∴வ்ரல் அமைப்பு, கொழும்பு.
- https://wwwthinakaran.lk/tags/தகவல்-அறியும்-உரிமை
- https://www.bbc.com/tamil/sri-lanka-38855191